## கச்சியப்பர் உவமை நயம்-11

# அழிவற்ற மாலைப்பொழுது

சிறு பொழுதுகளில் மாலைக் காலமும் ஒன்று காலை, நண்பகல் யாமம், வைகறை என்பன ஏனைய சிறுபொழுதுகளாம்.

தமிழ் இலக்கியங்களிலே இந்த மாலைக்காலம் பலபட வர்ணிக்கப்பட்டுள்ளது. அந்திப் பொழுது என்றும் புன்மாலை அந்திப் பொழுதென்றும் வர்ணிக்கப்பட்டுள்ளது சற்று நேரமே நிற்கும் தன்மையது-ஆதலால் "புன்மாலை" எனக் கூறப்பட்டது. என்பது உரையாசிரியர்களின் கருத்து "புலம்பொடு வந்த புன்கண் மாலை" என்றார் நற்றிணை ஆசிரியர் இறைவனை வணங்காச் செல்வர் நோக்க தினிலை போல வந்த பாலை வினைக் கல்லாட ஆசிரியர் கூறினர்.

"புன்மாலை" என்ற கருத்தில் கச்சியப்பர் காட்டும் ஒரு உவமையைக் காண்போம் வறியவன் ஒருவன் செல்வன் ஒருவனிடம்பொருள் இரக்கும் படி சென்றான், தாழ்ந்து நின்று இரந்து கேட்கிறான். செல்வனுக்கு கொடுக்க வசதி இருந்தும் ஒரு சிறிதளவேனும் அவன் கொடுக்கவில்லை. அவனைக் கச்சியப்பர் லோபி என்று சொல்லவில்லை. நீதிக்குப் பகைவன் என்று கூறினார். "நீதி ஒன்னலான் ஒருவன் என்று கூறுவது நிலைகவனிக்கத் தகுந்தது நீதியால் தான் உலகம் நடக்கிறது. அது அரச நீதியாய் இருக்கலாம். தெய்வ நீதியாகவும் இருக்கலாம். நீதியின் பகைவன் தண்டிக்கப்பட வேண்டியவன் ஆகவேயும் பொருளை வைத்துக் கொண்டு ஈயாத லோபிக்குத் தண்டனை கிடைத்து விடுகிறது. அவனது செல்வம் விரைவாக அழிந்து விடுகிறது "வைத் தீட்டினார் இழப்பர் வான்றோல் மனைநாட உய்த்திட்டும் தேனீக் கரி" என்பது நாலடியார் காட்டும் நீதி.

**வ. குகசர்மா**

வறுமையால் வாடிச்சென்று இரக்கும் வறியவர்க்கு ஒரு சிறிதேனும் பொருள் ஈயா நீதிக்குப் பகைவனாகிய ஒருவனுடைய செல்வம் விரைவாக அழிந்து போகுமாறு போல மாலை விரைவாகப் போயிற்று என்று கூறுகின்றார். மாகமேல் நிமிர்ந்த செக்கர் மாலையம் பொழுது நல்கூரந்தோரு இரக்குந்திரார்க் கிம்மியின் துணையும் தேனும் ஒகையால் வழங்கா நீதி ஒன்னலன் ஒருவன் செல்வன் செல்வம் போகுமாறெனெ வாழ்வாய் போனதைப்போயிற்றுமாம்

சிவபெருமானுக்குரிய பல வடிவங்களிலே "சோமஸ்கந்த" வடிவம் என்பது ஒன்று வலப்பக்கத்திலே சிவபெருமானும் மத்தியிலே குழந்தை வடிவமைந்த முருகனும் இடப்பாகத்திலே உமையம்மையாரையும் கொண்ட வடிவம் அது. சிவபெருமானுடைய தோற்றம் பகலுக்கு உவமையாக்கப்படுகிறது. "காலையே போன்றிலங்கும் மேனி சுடும் நகலின் வேலை நேபோன்றிலங்கும் செவ்வாய்" என்பது காரைக்கால் அம்மையார் காட்டும் உவமை. உமையம்மையாரின் உருவம் மூசிவண்ணம் "தெய்வநாயகன் நீரணி மேனிபோற் சென்றுபொளவ மேய்த்தமை மேனி போற் பசந்து" எனத் திருவிளையாடற்புராணம் கூறுகிறது

முருகனின் வடிவம் செவ்வண்ணம் ஒருவகையில் தந்தையின் திருமேனியை நிகர்த்தது என்றாலும் இங்கே சுடுஒளி அற்ற மாலையிற் தோன்றும் செவ்வண்ணத்திற்கு உவமையாக்கப்பெற்றது.

இரவும் பகலும் சந்திப்பது உலகியலில் முடியாத காரியம். ஒளியின் முன் இருள் நிற்க மாட்டாது. அதேபோல் புன்னிருத்திற்கு முன் பகலும் நிற்கமாட்டாது என்பர் சான்றோர்.

இவ்விடத்தில் பகலும் இரவும் மாத்திரமல்ல மாலை நேரமும் ஒருங்கு இருக்கும் அதிசயத்தை கச்சியப்பர் நமக்குக் காட்டுகிறார். அதுவும் மாலை நேரம் புன்மாலையாகாது நிலையான மாலையாகின்றது.



உமையம்மையாராகிய இறைவிக்கும், எம்பிரானும் இறைவனுக்கும் நடுவில் சிறுபாலனாகிய குமரவேள் நடுவில் இருக்கும் தன்மை பகற்காலத்திற்கும் இராக் காலத்திற்கும் நடுவில் மாலைக்காலம் ஒன்று அதுவும் அழியாமல் நிலையாய் இருப்பதை நிகர்க்கும்.

"ஏல வார்குழல் இறைவிக்கும்
எம்பிரான் றனக்கும்
பாலனாகிய குமரவேள்
நடுவுறும் பான்மை
ஞால மேலுறும் இரவொடு
பகலுக்கும் நடுவாய்
மாலை யானதொன் றழிவின்றி
வைகுமா றேய்க்கும்"

### அர்த்தமில்லை

சமத்துவத்தைக் காண்பதற்குச் சுதந்திரம் ஒரு காரணமாயில்லா விட்டால் அந்தச் சுதந்திரத்திற்கு அர்த்தமேயில்லை.

— மாஜினி

# பொன்னான வாழ்விற்கு திறவுகோலான திட்டம்

## நிம்மதியைத் தரும் திட்டம்

உங்கள் வருங்காலத்திற்கான திட்டம் வகுத்துள்ளோம். மாதாமாதம் அதுவும் பல வருடங்களுக்கு பொன்னான வாழ்விற்கு திறவுகோலான திட்டத்தின் மூலம் மேலதிக வருமானத்தை வழங்குகின்றோம்.

மூன்று பலன்தரும் ஏற்பாட்டின் மூலம் உங்களுக்கு மேலதிக வருமானத்தை அளிக்கின்றோம். இதில் ஒன்றை நீங்கள் தெரிவு செய்வதால், விலைகள் அதிகரித்துவரும் இக்காலத்தில் நாம் வழங்கும் மேலதிக வருமானம் உங்களுக்கு பெரும் உதவியாக இருக்கும் என்பது திண்ணம்.

இன்றே எம்மிடம் வந்து முழுவிபரத்தையும் அறியுங்கள். அதிலிருந்து உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் ஒளிமயமான எதிர்காலம் உண்டு என்பதை அறிவீர்கள்.

**த பினென்ஸ் கொம்பனி லிமிட்டட்**
செலின்கோ மாளிகை கொழும்பு 1.
தொலைபேசி 23861 - 2, 25621 - 5

கிளைகள்:
191, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
185/3, புத்தளம் வீதி, குருநாகல்
எல். ஜீ. ஜே. த சில்வா பில்டிங், 15, 2/3, கடற்கரை வீதி, மாத்தறை.
80, மட்டக்களப்பு வீதி, பொலன்னறுவை.
80, F/A பண்டாரநாயக்க மாவத்தை, இரத்தினபுரி.
353, டி. எஸ். சேனநாயக்கா வீதி, கண்டி.
116, ரெக்களமேஷன் வீதி, கொழும்பு 11.
130 D. தம்பிவெல் வீதி, நுகேகொடை.
F/B 9, வாட் வீதி, பதுளை.
120, மெயின் வீதி, அம்பாறை.


★ பாலர் கவிதை

### இன்பமாகப் பாடுவோமே!

சிறு மணலின் மீதினிலே
சின்னச் சின்ன வீடுகட்டி
சிறுவர் நாங்கள் கூடியாடி
இன்பமாகப் பாடுவோமே!

ஏணை கட்டி அதிலிருந்தி
எங்கள் அம்மா சொன்னதை
என்னவென்று நாம் வினவி
இன்பமாகப் பாடுவோமே!

வேப்ப மரக் கிளைதனிலே
தூங்குகின்ற ஊஞ்சலிலே
வேளை தோறும் ஏறியேறி
இன்பமாக ஆடுவோமே!

பெண்ணெண்டி என்று பெற்றோர்
பாடுபடும் வேளைதனில்
கூடமாட உதவி செய்து
ஆசிபெற்று மகிழுவோமே!

— கண. மகேஸ்வரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்காகோ நகரிலிருந்து உலகெலாம் பரவிய வீரமுழக்கம்



ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தர் அமெரிக்க நாட்டிலே சிக்காக்கோ நகரிலே 1883-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ந் தேதியன்று பூவுலகிற்குப் பொதுவாகக்கூடிய சர்வ சமய ஆராய்ச்சிப் பெருமன்றத்திலே ஒரு வீரமுழக்கம் செய்து இந்து சமயத் துறவியாக விளங்கியமை சரித்திரப் பிரசித்தமான கதையாகும். "அமெரிக்க நாட்டுச் சகோதரிகளே! சகோதரர்களே!" என, சுத்த அழகான வசீகரம் பொருந்திய வாலிபுடன் கூடிய தேஜஸ் நிரம்பிய இளம் இந்துத் துறவியானவர், சர்வ சமய சமரசத்தையும் சூசகமாக வைத்துக்கூறிய வார்த்தைகள் அந்தப் பெரிய ஆராய்ச்சிச் சபையை அதிர வைத்தன. எல்லோரும் ஏகோபித்து எழுப்பிய கரவொலிகளும், ஆரவாரங்களும் ஒருமித்து அந்த உரையினை வரவேற்றன. சுவாமிகள் தொடர்கிறார்: "உலகிலுள்ள துறவொழுக்க நியமங்களிலே மிகப் பழமை வாய்ந்த நிலத்தின் பெயரினாலே நான் உங்களுக்கு நன்றி கூறுகின்றேன். எல்லாச் சமயங்களுக்குந் தாயகமாகிய சமயத்தின் பெயரினாலே நான் உங்களுக்கு நன்றி கூறுகின்றேன். பல்வேறு வகுப்பினராய்ப் பல பிரிவாகிய மதங்களைக் கைக்கொண்டு ஒழுகும் கோடிக்கணக்கான இந்தியாவின் இந்து மக்களின் பெயரினாலே தான் உங்களுக்கு நன்றி கூறுகின்றேன். தலைப்பாகையுடன் கூடிய கம்பீரமான அந்த வீரத் துறவியை வைத்த கண் வாங்காமல் எல்லோரும் அகமகிழ்ச்சியுடன் நோக்குகின்றனர்.

ஆர். கந்தையா
கொக்குவில் இந்துக்கல்லூரி
முன்னாள் அதிபர்.

ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தஜீ மகராஜ் அந்தச் சபையிலே தொடர்ந்து, இந்து சமயத்தின் புராதனத் தன்மைகளையும், சனாதன தர்மத்தையும், வேதாந்த தத்துவஞானத்திலுள்ள மிகவுயர்ந்த கொள்கைகள் முதல் பல சிறப்புப்பட்ட புராணக் கதைகளோடு கூடிய விக்கிரக ஆராதனைகள் ஈறாகப் பௌத்தருடைய ஆஞ்ஞேய வாதம், மற்றும் நிரீச்சுரவாதமும் உட்பட எல்லாக் கொள்கைகளுக்கும் இந்து மதத்தில் இடமுண்டென்று எடுத்துக் கூறினார். வேதங்களையும், உபநிடதங்களையும், பகவத்கீதையையும் குறிப்பிட்டு விளக்கினார்.

## விவேகானந்தர் தோற்றம்

இந்துக்களும் இந்தியாவும் ஒன்றென மிகப் புராதன காலந்தொட்டு இருந்த நிலைகள் படிப்படியாக யுத்தம் செறிவுகளால் சிறிது மாறி சூழ்ச்சியாய்ப் படையெடுப்புகளால் பெரு மாற்றங்கள் அடைந்தன. ஈற்றில் ஐரோப்பியர் வருகையால் இந்தியர் அடிமை நிலைமைகளை அனுபவிக்கும் ஒரு நாடாக விளங்கியதையும் காணலாம். சுதேச சமஸ்தானங்களிருந்தாலும் ஆங்கிலேயர் சக்ராதிபத்தியத்தின் ஒரு முக்கிய அம்சமான பங்கை இந்தியா வகித்தது. 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஏற்பட்ட சிப்பாய்க் கலகம் என்ற முதலாவது சுதந்திரப் போர் ஆங்கிலேய ஏகாதிபத்திய வலுவினை இறுக்க உதவியதன்றி தளர்த்த முடியவில்லை. இக்காலத்தில் தான் சுவாமி விவேகானந்தரும் அவதரித்தருளினார்.

## காந்திஜிக்கு முன்னோடிகள்

19ம் நூற்றாண்டின் மத்தியில் முதலாவது சுதந்திரப் போரில் தோல்வி கண்ட பின்னர், நாட்டில் சமூக சீர்திருத்த இயக்கங்கள் [illegible] தோன்றலாயின. பிரம்ம சமாஜ சீர்திருத்த இயக்கங்கள் 'ஒருவனே தேவனென்னும்' கொள்கையை வற்புறுத்தின. சிலை வழிபாட்டினை ஒதுக்கி, சமூக அநீதிகளை நீக்கவும், மாதரை முன்னேற்றவும் ஒரு போராட்டம் நடத்தவும் சிலர் முற்பட்டனர். வடக்கே உதித்த 'ஆரிய சமாஜம்' போன்ற இயக்கங்கள் இந்து மதத்தில் ஆத்ம அபயங்களை வற்புறுத்தி ஒரு இந்திய சமுதாயம் அமைக்கவும் முயன்றன. இந்திய தேசிய காங்கிரஸ் என்ற இயக்கமும் தேசவிடுதலையை நோக்கமாகக் கொண்டு இக்காலத்தில் தோன்றியது. எங்கணும் குழப்பம் நிறைந்த இக்காலத்தில் கல்கத்தாவில் தக்ஷணேஸ்வரத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சதேவர் எனப் புகழும் பெயரும் பெற்ற பின்னர் சுவாமி விவேகானந்தரை ஆட்கொண்ட மகாஞானியார் வாழ்ந்து வந்தார். பலவித சமய சாதனைகளால் உயர்வடைந்த, பாடசாலைக் கல்வி அறிவில்லாத, காளி உபாசகராகிய ஸ்ரீ ராமகிருஷ்ணரும் சுவாமி விவேகானந்தரை பிரதம சீடராகக் கொண்ட ஒரு சிறு கூட்டமும் வங்காளத்தில் ஒன்று சேர்ந்தனர். நவீன இந்தியாவை அமைக்கும் சுதந்திர இந்தியாகப் பின்னர் விளங்கிய மகாத்மா காந்திஜிக்கு முன்னோடிகளாக ஸ்ரீ ராமகிருஷ்ணர் - ஸ்ரீ விவேகானந்தர் என்ற இருவரும் விளங்கினர்கள். சுதந்திர இந்தியா உதயமாவதற்கு முன் விடிவெள்ளி உதயமானது போலத்தான் ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தரின் வீரமுழக்கம் அமெரிக்க நாட்டிலுள்ள சிக்காக்கோ நகரிலிருந்து உலகுக்கு தோற்றமளித்தது.

ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தரின் வீரமுழக்கம் இன்னின்ன வகையில் உலகிற்கும் பயன்பட்டதெனக் கூறுதற்கு எளிதல்ல! ஆயினும் விவேகானந்த சுவாமிகளின் [illegible] ஆவேசமும், அவரது ஒழுக்கச்சிறப்புகளும், அவர் விட்டுச்சென்ற சில பதிவுகளும் இந்திய நாட்டிற்குப் பெரிதும் உதவின. "இந்தியாவிற்கு ஒரே வழியிலேதான் நம்பிக்கை உண்டு. அதைப் பொது மக்களிடம் இருந்துதான் எதிர்பார்க்க வேண்டும். ஏழைகளிடத்தும், பலவீனரிடத்தும், நோயாளிகளிடத்தும் இறைவனைக் காண்பவன் உண்மையாகவே அவனை வழிபடுகிறான். கோயில் இறைவனைக் காண்பவனைவிட அதிகமாக இவன்தான் இறைவனை மகிழ்விக்கிறான். இவர்களை முதலில் [illegible]" என்று சுவாமிஜீ இந்தியரைக் கேட்கிறார். இறைவழிபாட்டிற்கு இது மிக நல்ல முறையானது. "மன்னுயிருக்குப்பணி செய்தல்" என்பது சுவாமி விவேகானந்தரின் உறுதியான நம்பிக்கையாகும்.

சுவாமி மிகவும் தேசபக்தி உள்ளவர். உலக சமாதானத்திற்கும், உலக முன்னேற்றத்திற்கும், இந்திய கலாச்சாரம் உற்சாகத்தை வழங்கக்கூடும் என்று அவர் நம்பினார். ஆனால் அதற்குமுன் இந்திய நாட்டுக்குரிய சுதந்திரத்தையும் பெற்று தன் மதிப்பையும் உயர்த்திக் கொள்ள வேண்டும் என ஆசைப்பட்டார். இந்தியா தனது வறுமையைப் போக்கவும், சமுதாயத் தவறுகளைத் திருத்தவும், தனது வலிமையை வளர்க்கவும், உலகப்பொது நன்மைக்காக ஒத்துழைக்கவும் தனது ஞானச் செல்வத்தினின்று ஆவேசம் பெறவேண்டும்" என்று தான் சுவாமிகள் பெரிதும் விரும்பினார். அதற்காகவே அவர் இந்து நாகரிகத்தின் ஞான இயல்புகளையும், அதன் பண்பாட்டிற்குரிய பழக்கவழக்கங்களையும், அதன் பழம் பெருமைகளையும் வருங்காலத்துக்குரிய அதன் சேவைகளையும் தமது வீரமுழக்கங்கள் மூலமாக எடுத்து விளக்கினார். உலக அரங்கில் துணிந்து இவற்றைப் பறைசாற்றிய பெருமை சுவாமி விவேகானந்தருக்குரிய ஒரு தனிப்பெருமையாகும்.

"விவேகானந்தர் இந்தியர் தற்கால தேசிய இயக்கத்தை நிறுவிய பெரியார்களுள்

(9-ம் பக்கம் பார்க்க)

## கவிதை இயற்றுங்கள்

இங்கே வெண்பாவின் ஈற்றடி தரப்பட்டுள்ளது. மிகுதி மூன்று அடிகளையும் நீங்கள் இயற்றி 1-7-80 க்கு முன்னர் அனுப்புங்கள். தரமான பாடல்கள் சுடரொளி வாரமலரில் இடம்பெறும்.

வெண்பா ஈற்றடி

பங்கயத்தில் வண்டுதேனைப் பார்




புதுமையான போனஸ் திட்டம் உள்ள ஒரு சேமிப்பு

வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி சேமிப்போருக்கு ஒரு கவர்ச்சியான அம்சத்தை அளிக்கின்றது.

சேமிப்பு கணக்கு வழங்குவது வருடத்திற்கு 10% வட்டி

உங்கள் கணக்கிலிருந்து ஒருவருடம் பணத்தை மீளாதிருந்தால் வருடத்திற்கு மேலதிகமாக 5% வட்டி ஆகவே வருடத்திற்கு 15% வட்டி வழங்கப்படும்.

உங்களால் இயன்ற பொழுது சேமியுங்கள். இரமமாக பணம் கட்ட வேண்டும் என்ற நியதி இடையாது.

எம்முடன் கணக்கு வைத்துக் கொள்ளுங்கள். மேலதிக விசேட சேவைகளை அளிப்பதில் தனிப் பெருமை பெற்றவர்கள். எமது தலைமைக் காரியாலயத்தில் அல்லது எமது கிளை அலுவலகங்களில் முழுவிபரமும் அறிந்து கொள்ளலாம்.

கொள்ளுப்பிட்டி - 26174 கொட்டாஞ்சேனை - 23471
கண்டி - 08 - 3163 அல்லது 08 - 3217
யாழ்ப்பாணம் - 276 காலி - 09 - 2377
கலேவெல்ல - 95 மாத்தளை - 0662 - 485
வள்ளவத்தை - 86097 மாத்தறை - 041 - 2819

வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி
57 சேர் பாரன் ஜெயதிலக்கா மாவத்தை கொழும்பு 1.
தொலைபேசி - 28193/5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மக்களுக்கு
ஓர் நற்செய்தி......
CIC பெயின்ற் வகைகளான
டியுகோ : DUCO
டியுலக்ஸ் - DULUX
பென்றலைற் - PENTALITE
சகல வர்ணங்களிலும்
கிடைக்கிறது
கதிர் ஹாட்வெயர்ஸ்
( TILLY'S GROUP)
11/1-2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். போன்:7130

## இன, மத, சாதி பேதமற்ற சகாப்தம் உருவாகிறது

### பிரதமர் 'பிரேமா' மகிழ்ச்சி

(பொத்துவில்)

இன, மத, சாதி பேதமற்ற புதிய சகாப்தம் ஒன்று இப்போது உருவாகி வருகிறது என்று பிரதமர் திரு. ஆர். பிரேமதாசா கூறினார்.

பொத்துவில் தொகுதியில் மாதிரிக் கிராமம் ஒன்றைத் திறந்து வைத்துப் பேசுகையில் அவர் மேலும் கூறியதாவது:

இந்நாட்டு மக்கள் சகலரும் சம உரிமையுடன் சகோதரர்களாக வாழ வேண்டும். இந்த இலட்சியத்திற்கிணங்கவே தொகுதிகள் தோறும் மாதிரிக் கிராமங்கள் அமைக்கப்படுகின்றன. (இ)

சிலோபெக் பொலித்தீன்
பொலித்தின் பேக்ஸ்
வெள்ளை காலுறைகள்
சலுசலா பிடவைகள்
பிளீட் சிப்ஸ்

அனைத்தும் மலிவு விலையில்

சிக்கோ டிரேடர்ஸ்
43, நவீன சந்தை, யாழ்ப்பாணம்

### மொரிஷியஸ் தமிழர் மத்தியில்

# பண்பாடு நிலைபெற்றதற்கு பெண்களே காரணம்!

## யாழ் வந்த சின்னம்மா புஷ்பரதம் தகவல்

- ✶ பெரிய வணககாரர்களும் கூட தாலிக் கொடி கட்டுவதில்லை, தாலிக்கயிறுதான். வருடத்தில் ஒரு நாள் தாலிக் கயிறு மாற்றுவார்கள்:
- ✶ ஆண்கள் வேட்டியை மறந்துவிட்டாலும் பெண்கள் புடவையை மறக்கவில்லை
- ✶ சீதனம் கொடுப்பதில்லை. பெற்றோர் விரும்பினால் ஏதும் கொடுப்பர்.

மொரிஷியஸ் நாட்டில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் தமிழ்ப் பண்பாடும் பாரம்பரியமும் அழியாமல் நிலைத்திருப்பதற்கு அங்கு வாழும் தமிழ்ப் பெண்மணிகளே காரணமாகும். அந்நிய சூழ்நிலையில் வேற்று மொழிகளைப் பயில நேர்ந்த போதிலும் தமிழ்பண்பாடுகளை அவர்கள் பேணிப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள்.

இத்தகவலை அண்மையில் இலங்கை வந்திருந்த மொரிஷியஸ் நாட்டைச் சேர்ந்த திருமதி சின்னம்மா புஷ்பரதம் தெரிவித்தார்.

மொரிஷியஸ் நாட்டில் கல்வி அதிகாரியாகப் பணியாற்றும் திருமதி சின்னம்மா புஷ்பரதம் தமது கணவர் திரு. புஷ்பரதத்துடன் யாழ்ப்பாணம் வந்திருந்தார். கணவன் மனைவி இருவருமே மொரிஷியஸ் நாட்டில் கல்வித்துறை அதிகாரிகளாகப் பணியாற்றுகின்றனர். ஆனால் திரு. புஷ்பரதம் தற்பொழுது இந்திய வி... புலமைப் பரிசில் பெற்று ... சித்தாந்தத்துறையில் பயின்று வருகின்றார்.

இத்தம்பதிகள் உலகத் தமிழர் பண்பாட்டுக் கழகப் பொதுச் செயலாளர் திரு. இரா. ஜனகரத்தினத்தின் விருந்தினராக யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தனர். திரு. ஜனகரத்தினம், அவர்களை யாழ்ப்பாணத்தின் பலவேறு இடங்களுக்கும் அழைத்துச் சென்று காண்பித்தார்.

மொரிஷியஸ் நாட்டில் குடியேறி வாழ்ந்து வரும் பழம் தமிழ்ப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் இத்தம்பதிகள். ஆங்கிலம் நன்கு ஆங்கிலம், பிரஞ்சு, தமிழ் மொழிகளைப் பேசுகிறார். மனைவிக்குத் தமிழ் ஓரளவே பேச முடிகிறது.

திருமதி புஷ்பரதம் தமது பணிகள் பற்றியும் கூறினார். முதலில் ஆசிரியையாகத் தமது தொழிலை ஆரம்பித்த அவர் உரிய கல்வித் தகைமைகளை அடைந்த பின் கல்வி அதிகாரியாகப் பதவி ஏற்றார்.

தமது பல்வேறு கடமைகளுக்கிடையில் கணவரின் பணிகளிலும் உதவி புரிந்து வருவதாக அவர் கூறினார்.

மொரிஷியஸில் தமிழ் மக்கள் மத்தியில் பழம் பண்பாடுகளும் பாரம்பரியங்களும் நிலைத்திருப்பதற்கு ... சமூகப் பெண்களே காரணம் என்று ... கூறினார்.

தமிழ்ச் சமூகம் தனித்தன்மையுடன் விளங்குவதற்கு அங்குள்ள தமிழ்ப் பெண்களின் தான் காரணம் என்பதைத் திரு. புஷ்பரதமும் வலியுறுத்தினார்.

ஆண்கள் பெரும்பாலும் குடியேற்றக்காரர்களாக மாறிவிடுகிறார்கள் ஆனால் பெண்கள் தான் பாரம்பரியத்தை காப்பாற்றுகிறார்கள் என்றார் அவர்.

### தமிழ் விழாக்கள்

தமிழ் விழாக்கள், பண்டிகைகளில் ஆண்கள் வேஷ்டி கட்டுவதை கைவிட்டுவிட்ட போதிலும் தமிழ்ப்பெண்கள் சேலை உடுப்பதை மறந்து விடவில்லை. இதுவே தமிழ்ச் சமுதாயத்தை தனித்துவப்படுத்திக் காட்டுவதாக இருக்கிறது என்று திருமதி சின்னம்மா புஷ்பரதம் கூறினார்.

திருவிழாக்களில், வைபவங்களில் தமிழ் உணவுகள் இடம் பெறுவதாகவும் வடை பாயசம் போன்ற பலகாரங்கள் உண்டு என்றும் சொன்னார். கிழமைகளில் வாழை இலையில் உணவு பரிமாறும் பழக்கம் இருந்து வருகின்றது என்றும் முக்கிய சமய நாட்களில் விரதம் அனுஷ்டிப்பதையும் பெண்கள் கைவிடவில்லையென்றார்.

### தாலிக்கொடி

வருடம் தோறும் ஆடி மாதம் 18ந் திகதி பெண்கள் தமது தாலிக் கயிற்றைப் புதுப்பிக்கும் வைபவம் சிறப்பாக இடம்பெற்று வருகின்றது என்றும் இந்தப் பழக்கம் தமிழ் நாட்டில் கூட இப்பொழுது அருகிவருவதாகவும் இருவரும் தெரிவித்தனர்.

மகாசிவராத்திரி தமிழ் வருடப் பிறப்பு போன்றவை சிறப்பாகக் கொண்டாடப்படுவதாகவும், தைப்பூசத்தன்று பொது விடுமுறையென்றும் இந்துக்கள் அனைவரும் இத்திருவிழாவைக் கொண்டாடுவார்கள் என்றும், பெண்கள் காவடி தூக்கி ஆடுவர் என்றும் தெரிவித்தனர்.

### தமிழ்த் திருமணங்கள்

அங்கு நடைபெறும் தமிழ்த் திருமணங்கள் பற்றி அவர்கள் தெரிவித்த போது மாப்பிள்ளை நல்ல குணவானா என்றும் குடும்பம் நடத்த வசதியுள்ளவரா என்றும் மாத்திரமே கவனிக்கப்படுகின்றது என்றும் சாதி குலம் பற்றி கவனிப்பதில்லையென்றும் கூறினர்.

பெண் பார்த்து நிச்சயதார்த்தம் முடிந்த பின் ஒன்றரை ஆண்டு காலம் "நிறுத்தி வைத்தல்" என்ற முறை கடைப்பிடிக்கப்படுவதாகவும் இந்தக் காலத்தில் மாப்பிள்ளை மணப் பெண்ணை அடிக்கடி சந்தித்துப் பழக வாய்ப்பு இருக்கும் என்றும் அநேகமாய் வீட்டுத் தேவைகளைக் குறிப்பாகத் தையல் கலை வேலைகளில் மணப்பெண் பயிற்றுவிக்கப்படுவார் என்றும் கூறினார்.

### சீதனம் இல்லை

திருமணத்தின் பின் சீதனம் எதுவும் கொடுக்கப் படுவதில்லை. ஆனால் பெற்றோர் விரும்பினால் தம் வசதிக்கேற்ப எதுவும் கொடுப்பார்கள் இது கட்டாயமும் இல்லை. ஆனால் வீட்டுப் பாவனைக்குத் தேவையான உடுப்புடைவைகள், விரிப்புகள், உறைகள் போன்றவை போதியதாக வழங்கப்படும். இவைகளைச் சேகரிப்பதற்காகவே நிறுத்தி வைத்தல் முறை கைக்கொள்ளப்படுகிறது என்றும் தெரிவித்தனர்.

### தமிழ் கற்கும் ஆர்வம்

ஆரம்ப பள்ளிகளில் தமிழ்ப் பிள்ளைகள் தமிழ் கற்பதற்கு வசதி இருக்கின்றது. 30 மாணவர்களுக்கு ஒரு தமிழ் ஆசிரியர் என்ற முறையில் தமிழ்க் கல்வி அளிக்கப்படுகின்றது. இதனை இடைநிலைப் பள்ளிகள் மட்டத்திலும் ஏற்படுத்த விரும்புகின்றோம். இதற்கு ஆசிரியர் பற்றாக்குறை இருந்து வருகின்றது. அத்துடன் 30 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற நிலைமையை மாற்றியமைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்ட மொரிஷியஸ் கல்வி அதிகாரியான திரு. புஷ்பரதம் தாம் நாடு திரும்பிய பின் இது பற்றி தமது நாட்டு மேலதிகாரிகளுடன் நேரில் கலந்து நடவடிக்கை எடுக்க உத்தேசித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

(9ம் பக்கம் பார்க்க)

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 10-12-1906 மறைவு 10 5-1980

சிவபதமடைந்த எமது அருமைத்தந்தை யாழ் நல்லதம்பி பொன்னம்பலம் அவர்களின் ஈமக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் அனுதாபச்செய்திகள் அனுப்பியோருக்கும் 20-6-80ல் கீரிமலைத் தீர்த்தக்கரையில் நடைபெற்ற அந்தியேட்டிக் கிரிகைகளின் போது பங்கு கொண்டோருக்கும் நன்றி நவில்வதோடு 22-06-1980 ஞாயிறு பகல் எமதில்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்தியத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம்
மக்களும் மருமக்களும்

"பொன்மணிவாசம்"
உடையார்
புங்குடுதீவு-7

## மரண அறிவித்தல்

### திருமதி சிவபாக்கியம் சடாட்சரம்

நாவற்குழியூர் திருமதி சிவபாக்கியம் சடாட்சரம் காலமானார். இவர் இளைப்பாறிய தபாலதிபரும், முன்னைநாள் கிராமசபை முதல்வருமான திரு. சோ. சடாட்சரத்தின் பிரிய பத்தினியும் சோமலிங்ககுமாரின் (குமார், மே. ஜெர்மனி) அன்புத் தாயாருமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (22-6.80) பிற்பகல் இரண்டு மணியளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் ஏற்றுக்கொள்ளவும்.

6101

... R ... Sri Lanka under No. CE/6068/78. The Eelanadu ... 22-ந் திகதி ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org